சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 2/2021

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ம் நாள் PW3 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு. ஜெயமூர்த்தி<br>த /பெ. முனுசாமி | நாள் 07.08.2025 |
| வயது. 67 | தொழில் |
| கிராமம். கொடுக்கூர் | வட்டம். |

<u>மனுதாரர் சா.3 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1). நான் மனுவில் மூன்றாம் தரப்பினர் மற்றும் மனுதாரர் தரப்பு சாட்சி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) சா.சா.ஆ. 3

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) வேன் மீது லாரி மோதி நிற்காமல் சென்றுவிட்டது. நான் வேனுக்கு பின்னால் சுமார் 2 அடி தள்ளி நின்று கொண்டிருந்தேன். லாரி இடித்தவுடன் நிற்காமல் வேகமாக சென்றுவிட்டது. அதனால் லாரியின் பதிவெண்ணை பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். விபத்து இரவு நடந்தது. காலையில் புகார் அளித்துவிட்டேன். வேன் ஓட்டுநர் கைத்தடை போட்டிருந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் பெண்கள் அனைவரும் வேனின் முன்புறம் அமர்ந்திருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சிலர் அமர்ந்திருந்தனர், சிலர் நின்றிருந்தனர். விபத்து சம்மந்தமாக போலிசார் காவல் நிலையத்தில் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள்.

2) என்னை அதில் சாட்சியாக சேர்த்தார்களா என்று குற்ற இறுதி அறிக்கையை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில்தான் சாட்சியம் அளிக்கிறேன். வேனின் உரிமையாளர் நஷ்ட ஈடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. ஏற்கனவே சாட்சியளித்த சாட்சியங்களுக்கு ஆதரவாக என் பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் வாகனத்தின் பின்புறம் நான் நின்றிருந்தால் எனக்கும் அடிப்பட்டிருக்கும் என்றால் லாரி வந்த வேகத்தைப் பார்த்து நான் ஒதுங்கிக் கொண்டேன். நான் கூறுவதுபோல் விபத்து நடக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.